**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அன்னூர்.**
Deposition of witness

09.02.2026 **அ.வ.எண். 395/2024** DW-1

| | |
|---|---|
| பெயர் | கே.சுப்பிரமணியம் |
| த.பெ. | கிருஷ்ணாரெட்டி |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு சொத்துக்களை நான் கிரையம் பெறும்போது சட்டக்கருத்துரை பெற்று தான் கிரையம் பெற்றேனா என்றால் இல்லை. ஆனால் வில்லங்கச்சான்றிதழ் 1950-ம் ஆண்டிலிருந்து சரிபார்த்தேன். அதன் நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1920-ம் ஆண்டிலிருந்து தாக்கல் செய்துள்ளேன். கிரையம் பெறுவதற்கு முன்னர் 1920-ம் ஆண்டிலிருந்து 1950-ம் ஆண்டுவரை ஆவணங்கள் சரிபார்க்கவில்லை என்றால் சரிதான். நான் வில்லங்கச்சான்றிதழை சரிபார்த்தபோது 1 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளின் பெயர்கள் இடம் பெற்றிருந்ததா என்றால் இருந்தது. நான் கிரையம் பெறுவதற்கு முன்னர் வழக்கின் மூல ஆவணங்களை சரிபார்த்தேனா என்றால் அவர்கள் மூல ஆவணங்கள் கொடுத்திடவில்லை. நான் 1 முதல் 8 பிரதிவாதிகளிடம் வழக்கு சொத்து அவர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை பொருத்து விசாரித்தேனா என்றால் அவர்கள் என்னிடம் நீதிமன்றத்தின் தீர்ப்பு நகலை காண்பித்தார்கள். அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு நகலை படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். நான் கிரையம் பெற்ற பத்திரித்தில் அந்த சொத்துக்கான மூலம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தான் இருந்தது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுளேன். இந்த வழக்கின் வாதிகள் ஏதேனும் முந்தைய வழக்கில் தரப்பினராக உள்ளார்களா என்றால் ராஜன் என்பவர் மட்டும் தரப்பினராக இருந்தார்.

**(வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

| |
|---|
| Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct. |

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur